### ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நலத்துறையில்

# திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன!

## அமைச்சர் மா.மதிவேந்தன் விளக்கமான அறிக்கை!



சென்னை, அக். 15-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தவறான தகவல்களோடு அறிக்கை வெளியிட்டுள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையில் திட்டங்களும் ஒதுக்கீடுகளும் முறைகேடுகளுக்கும் இடமின்றி செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று அத்துறையின் அமைச்சர் மா.மதிவேந்தன் விளக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எடப்பாடி பழனிசாமியின் அறிக்கைக்கு மறுப்பு தெரிவித்த அமைச்சர் மா.மதிவேந்தன் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தாட்கோ மூலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பல்வேறு இதர நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் முடங்கி இருந்தது. மேலும், தாட்கோ மூலம் தொழில் முனைவோரை ஊக்குவிக்க, மானியத்துடன் கூடிய கடன் வழங்க பெறபட்ட 3,963 விண்ணப்பங்கள் இருப்பில் வைக்கப்பட்டு, இம்மானியத்திற்கான தொகை ரூபாய் 52.01 கோடி விடுவிக்கப்படாமல் வங்கிகளில் நிலுவையில் இருந்தது. இந்நிலையை உடனடியாக சரிசெய்வதற்கு, மாவட்ட அளவில் மேலாளர்கள், உதவி மேலாளர்கள், திட்ட மேலாளர் போன்ற பணியிடங்கள் நிரப்புவது மிகவும் அவசியமாகும்.

தாட்கோவில் பெரும்பாலான மேலாளர் பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன. நிர்வாக நலன் கருதி தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் வாழ்வாதார திட்டங்கள் மற்றும் கடனுதவி வழங்குவதற்கான விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலனை செய்து வங்கிகளில் உள்ள நிதியினை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக 11 மாவட்ட மேலாளர்கள், 6 உதவி மேலாளர்கள் போன்ற பணியிடங்கள் ஆட்சேர்ப்பு நிறுவனத்தின் மூலம் தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளது.

#### துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது!

இப்பணியிடங்களை தற்காலிகமாக நிரப்பியதன் மூலம் கடந்த ஆட்சி காலத்தில் வங்கியில் இருந்து விடுக்கப்படாத மானியத்தொகையுடன் இன்றைய தேதிவரை உள்ள ரூபாய் 100 கோடிக்கான மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த வருடத்திற்கான கடனுதவி விண்ணப்பங்களும் பெறப்பட்டு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தாட்கோ தொழில்நுட்ப பிரிவில் 2 செயற்பொறியாளர் பணியிடம், 18 உதவி செயற்பொறியாளர் பணியிடம் மற்றும் 80 உதவி பொறியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றினை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் அப்பணியிடங்கள் நிரப்பப்படும். தாட்கோ மூலம் சுமார் 600 கோடி மதிப்பீட்டிலான பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கு தரமான உணவுகளை வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் “அமுத சுரபி” எனும் திட்டம் கடந்தாண்டு தொடங்கப்பட்டு, முன்னோடித் திட்டமாக சென்னை மாநகரில் உள்ள விடுதிகளுக்கு மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, பொது சமையலறையிலிருந்து அருகில் உள்ள விடுதிகளுக்கு காலை, மாலை மற்றும் இரவு என மூன்று வேளைகளிலும் மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் நிறைவான மற்றும் தரமான உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த முறைப்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, விதிகளின்படி தேர்வுசெய்யப்பட்ட ஒப்பந்ததாரர் நிறுவனத்திற்கு இப்பணி வழங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. விடுதி மாணவர்களிடையே இத்திட்டம் பெரிதும் வரவேற்பை பெற்றுள்ளது. மேலும், இத்திட்டத்தினால் விடுதியில் உள்ள சமையலர் எவருக்கும் பாதிப்பு இல்லாமல், அவர்கள் அவ்விடுதியின் இரவுநேர காப்பாளராக பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

#### அரசு விதிகளின்படி கலந்தாய்வு!

பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர் பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. அரசு விதிகளை மீறி 3 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து 15 வருடங்களுக்கு மேலாகவே விடுதி காப்பாளர்களாக பணியாற்றும் காப்பாளர்களை அரசு விதிகளின்படி மாற்றம் செய்வதற்கு கலந்தாய்வு நடைபெற்று வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்லூரி மாணவர்கள் தங்கும் விடுதிகளில் Bio Metric, CCTV மற்றும் TEXCO பாதுகாவலர்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதனால், வெளியாட்கள் யாரும் முறைகேடாக தங்குவதற்கு வாய்ப்பில்லை.

தென்காசி மாவட்டத்தில் வெங்கடாம்பட்டி ஊராட்சியில், லெட்சுமியூர், ஆறுமுகப்பட்டி ஆதி திராவிடர் காலனியில் உள்ள வீடுகளுக்கு ரூபாய் 5.10 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நிறைவுற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, உண்மைக்குப் புறம்பான செய்தியை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை வேங்கைவயல் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித கழிவு கலந்தது தொடர்பான வழக்கு, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

ஒன்றிய அரசால் வழங்கப்படும் நிதியானது இத்துறையால் முழுமையாக பயன்படுத்தப்படுகிறது. கடந்த 2023-2024ம் ஆண்டில் PMAGY திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபாய் 186 கோடியும் SCAGrants in aid திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ரூபாய் 61 கோடியும் முழுமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எதிர்கட்சி தலைவரின் அறிக்கை தவறான செய்தியாகும்.

#### முற்றிலும் தவறான செய்தி!

பழங்குடியினர் மேம்பாட்டு வசதிக்காக “தொல்குடி” என்ற திட்டம் தொடங்கப்பட்டு, அதற்கான அரசு ஆணைகள் தற்போதுதான் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்பது முற்றிலும் தவறான செய்தியை எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சமூக நீதி அடிப்படையிலான சமத்துவ சமுதாயத்தினை உருவாக்க உறுதி பூண்டுள்ள முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையின் கீழ் இயங்கி வரும் இவ்வரசு சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை அனைத்து நிலைகளிலும் உயர்வடையச் செய்வதற்கான பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.23.75 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்திற்கு நேற்று (14.10.2024) அடிக்கல் நாட்டி வைத்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜித் சிங், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர், சிவலிங்கம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, அரசு போகன் குமாரபங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் ஜெ. தேவி மீனாள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### முன்னாள் குடியரசுத் தலைவர்

# டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் பிறந்தநாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் இன்று மாலை அணிவிக்கின்றனர்!

சென்னை, அக். 15 -

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் இன்று (15.10.2024 ) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

டாக்டர். ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் ஜைனுலாப்தீனுக்கும், ஆஷியம்மாவுக்கும் மகனாக இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் 15.10.1931 அன்று பிறந்தார்.

டாக்டர். ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் தம் பள்ளிப்படிப்பைத் இராமேஸ்வரத்தில் தொடங்கி, உயர்படிப்பை திருச்சிராப்பள்ளியிலுள்ள “செயின்ட் ஜோசப் கல்லூரியில்” இயற்பியலில் இளங்கலை பட்டம் பெற்றார். தொடர்ந்து சென்னையிலுள்ள எம்.ஐ.டியில் 1955 ஆம் ஆண்டு “விண்வெளி பொறியியல் படிப்பை” முடித்து, பின்னர் அதே கல்லூரியில் முதுகலைப் பட்டமும் பெற்று அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார். அவருடைய எண்ணப்படி மக்களுக்கான அரசின் திட்டங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் இடையே வேறுபாடின்றி எல்லோருர்க்கும் சென்றடைய வேண்டும்.

மேலும், அனைவர்க்கும் குடிநீர், எரிசக்தி, விவசாயம், தொழில், சேவை, ஒருங்கிணைந்த முன்னேற்றம், சமூகப் பொருளாதாரம், பண்பாட்டுடன் சிறந்த கல்வி, தரமான மருத்துவ வசதி கிடைக்கப் பெற வேண்டும். வறுமை ஒழிக்கப்பட்டு கல்லாமை இன்றி, பெண்கள், குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

டாக்டர். ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் 1960 ஆம் ஆண்டு வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO) விஞ்ஞானியாக தம்முடைய ஆராய்ச்சி வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர், இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கூடத்தில் (ISRO) தமது ஆராய்ச்சிப்பணிகளைத் தொடர்ந்த இவர், துணைக்கோள் ஏவுகணைக் குழுவில் (SLV) செயற்கைக்கோள் ஏவுதலில் முக்கியப் பங்காற்றினார்.

1980 ஆம் ஆண்டு SLV III ராக்கெட்டைப் பயன்படுத்தி ரோகினி I என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவச் செய்தார். இது அவருக்கு மட்டுமல்லாமல், இந்தியாவிற்கே ஒரு சாதனையாக அமைந்தது. இத்தகைய வியக்கத்தக்க செயலைப் பாராட்டி ஒன்றிய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப் பெரிய விருதான “பத்ம பூஷண்” விருது, 1990 ஆம் ஆண்டு “பத்ம விபூஷண்” விருது ஆகியவற்றை வழங்கி சிறப்பித்துள்ளது.

டாக்டர். ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் பிரமோஸ் ஏவுகணை உருவாக்குதல், 1960 ஆம் ஆண்டு இந்திய ராணுவத்துக்குத் தேவையான சிறிய ரக ஹெலிகாப்டரை வடிவமைத்துக் கொடுத்தல், SLV, SLV3, ரோகினி1, செயற்கைக்கோள் ஏவுதல் ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றினார். மேலும், திரிசூல், அக்னி, பிருத்வி, நாக், ஆகாஷ் போன்ற ஏவுகணைகள் இவர் திட்ட இயக்குநராக இருந்த போது கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

1999 ஆம் ஆண்டு பொக்ரான் அணு ஆயுதச் சோதனையை வெற்றிகரமாக நிறைவேற்றினார். மேலும், கால்கள் பழுது பட்டவர்களுக்கான எடை குறைந்த செயற்கை மாற்றுக் கால்கள் உருவாக்கிக் கொடுத்தார். டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் இளைஞர்களை ‘கனவு காணுங்கள்’ என்று கூறினார். இதனால் கோடிக்கணக்கான இளைஞர்களின் மனதில் நீங்காப் புகழோடு வாழ்கிறார்.

அப்துல் கலாம் இந்திய விண்வெளித் துறையில் இவர் நிகழ்த்திய சாதனைகள் மூலம் அனைவராலும் போற்றப்பட்டு, 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்று, இந்தியாவின் 11 வது குடியரசுத் தலைவராக 2002 ஜூலை 25 ஆம் நாள் பதவியேற்றார். குடியரசு தலைவராவதற்கு முன், இந்தியாவின் மிகப்பெரிய விருதான “பாரத ரத்னா விருதை” ஒன்றிய அரசு இவருக்கு வழங்கிப் போற்றிப் பாராட்டியது.

இதன் மூலம், “பாரத ரத்னா” விருது பெற்ற மூன்றாவது குடியரசுத் தலைவர் என்ற பெருமையை இவர் பெற்றார். 2007 ஆம் ஆண்டு வரை குடியரசுத் தலைவராகத் திகழ்ந்த இவர், “மக்களின் ஜனாதிபதி” என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்கள் “குழந்தைகளுக்குக் கனவு உண்டு. அந்தக் கனவை நனவாக்கும் லட்சியம் அந்தக் குழந்தைகளிடம் மிகுந்திருக்கும் என கூறினார். “அக்னிச் சிறகுகள், இந்தியா 2020, வெளிச்சப் பொறிகள், மிஷன் இந்தியா, திருப்புமுனைகள்: சவால்களுக்கு இடையே ஒரு பயணம், எனது பயணம், “ போன்ற புத்தகங்களை எழுதியுள்ளார். நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பட்ட டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் 2015ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

இத்தகைய போற்றலுக்கும் மரியாதைக்கும் உரிய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அவருடைய திருவுருவச் சிலையை நிறுவி, அவர்களின் திருக்கரங்களால் 15.10.2023 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டுசிறப்பிப்பார்கள்.

### வடகிழக்குப் பருவ மழை:

# எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, அக். 15-

கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்கள் பருவ மழையை எதிர்கொள்ள அளித்துள்ள வழிகாட்டுதலின்படி, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி, வார்டு எண்கள் 61, 77, 78 மற்றும் 99க்குட்பட்ட மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.77இல் புளியந்தோப்பு, டிமலஸ் சாலை, முனுசாமி கால்வாய் அருகில் 325 HP திறன் கொண்ட ஐந்து மோட்டார்களும்; டிமலஸ் சாலைஅன்சாரி சாலை அருகில் 100 HP திறன் கொண்ட மோட்டாரும்; மோதிலால் தெருவில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும்; சிவராவ் சாலையில் 100 HP திறன் கொண்ட மோட்டாரும்;

வார்டு எண்.99, கீழ்ப்பாக்கம், சாஸ்திரி நகரில் 100 HP திறன் கொண்ட மோட்டாரும், மழை நீரை வெளியேற்றுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதை இ.பரந்தாமன், எம்.எல்.ஏ, பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளோடு ஆய்வு செய்தார்.

வார்டு எண்.61இல் பூபதி நகரிலும் மற்றும் வார்டு எண்.78இல் வீ.வீ.கோவில் தெரு மற்றும் டி.கே. தெருவிலும் மழைநீர் வடிகால் கட்டப்பட்டுவருவதை ஆய்வு செய்து, அக்கட்டுமானப் பணியை விரைந்து முடிக்க அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஏற்பாட்டில் பருவ மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எழும்பூர் தொகுதி, 58ஆவது வட்டம், காளத்தியப்பா தெருவில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும்; அல்லிகுளம் பீப்பிள்ஸ் பார்க் தெருவில் 10 HP திறன் கொண்ட மோட்டாரும்; டாக்டர் அழகப்பா சாலையில் 10 HP திறன் கொண்ட மோட்டாரும்;

61ஆவது வட்டம், அய்யாசாமி குடிசைப் பகுதியில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும்; மீர் மதன் அலி தெருவில் 10 HP திறன் கொண்ட மோட்டாரும்; ரங்காச்சாரி தெருவில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும்; கெங்கு ரெட்டி சப்வேயில் 10 HP மற்றும் 25 HP திறன் கொண்ட இரண்டு மோட்டார்களும்;

77ஆவது வட்டம், புளியந்தோப்பு நெடுஞ்சாலை மார்கெட் தெரு சந்திப்பில் 35 HP திறன் கொண்ட மோட்டாரும்;

78ஆவது வட்டம், தானா தெரு, அம்மா உணவகம் அருகில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும்;

99ஆவது வட்டம், பூபதி நகரில் 100 HP திறன் கொண்ட மோட்டாரும்; பிரிக்ளின் சாலை, சண்முகராயன் தெருவில் 25 HP திறன் கொண்ட இரண்டு மோட்டார்களும்;

108ஆவது வட்டம், தாஸ்புரத்தில் 25 HP திறன் கொண்ட மோட்டாரும் மழைநீர் தேங்குவதை வெளியேற்றுவதற்காகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டார்.




தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 பம்மல் அலுவலகத்தில் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மண்டல குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை மேயர் கோ.காமராஜ், செயற் பொறியாளர் ஞானவேல்,மாமன்ற உறுப்பினர்கள் ஆ.மதினாபேகம், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், மு.இன்பசேகர், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன்,மண்டல கண்காணிப்பாளர்,பொதுப்பணி மேற்பார்வையாளர்கள்,சுகாதார அலுவலர் மற்றும் மண்டல பணியாளர்கள் கலந்துகொண்டனர். புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டல அலுவகத்தில் தளவாட பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

# 10, 11, 12ஆம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகள் அட்டவணை!

## கோவையில் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டார்!

கோவை, அக். 15-

தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 10, 11, 12ம் வகுப்புக்கான 2024-25 கல்வியாண்டின் பொதுத் தேர்வு கால அட்டவணையை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று (அக்டோபர் 14) காலை வெளியிட்டார்.

அதன்படி, “பிளஸ் 2 செய்முறைத் தேர்வு அடுத்த ஆண்டு (2025) பிப்ரவரி 7ல் தொடங்கி பிப்ரவரி 14ல் முடிவடையும். பிளஸ் 1 செய்முறைத் தேர்வு பிப்ரவரி 15ல் தொடங்கி பிப்ரவரி 21ல் நிறைவடையும், 10ம் வகுப்புக்கான செய்முறைத் தேர்வு பிப்ரவரி 22 தொடங்கி 28 ஆம் தேதி நிறைவுபெறும்.

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2025 மார்ச் 3 ஆம் தேதி தொடங்கி மார்ச் 25 ஆம் தேதியும், 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2025 மார்ச் 5 ஆம் தேதி தொடங்கி மார்ச் 27 ஆம் தேதியும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு 2025 மார்ச் 28 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 15 ஆம் தேதியும் முடிவடைகிறது.

அதேபோல், 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் 2025 மே 9 ஆம் தேதியும், 11 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் 2025 மே 19 ஆம் தேதியும் வெளியாகும்” என்று அமைச்சர் அறிவித்தார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர், “மாணவர்கள் பொதுத் தேர்வை எதிர்கொள்ள பொறுப்புடன் தயாராக வேண்டும், தேர்வுக்கு அஞ்சக் கூடாது. மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும். மற்றதை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் பார்த்துக் கொள்வார்” என்று ஊக்கமளித்தார்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் (சமக்ர சிக்சா அபியான்) கீழ், தமிழகத்துக்கு தர வேண்டிய நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது தொடர்பான கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் அன்பில் மகேஸ், “மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள ஒன்றிய அரசு அழுத்தம் தருகிறது. தமிழகத்துக்கான நிதியை ஒதுக்காமல் நிர்பந்தப்படுத்து கிறது. கல்வித் துறையில் நல்ல முறையில் செயல்பட்டு பிறருக்கு வழிகாட்டியாக இருக்கும் தமிழகத்தை ஒன்றிய அரசு நெருக்குதலுக்கு உள்ளாக்குவது ஏற்புடையதல்ல.” என்றார்.



கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான ப.திருமாவேலன் அவர்களின் தாயார் முத்துலக்குமி அவர்களின் மறைவையொட்டி அவரது இல்லத்தில் வைக்கபட்டுள்ள அவரின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.